IN THE COURT OF III ADDITIONAL CITY CIVIL COURT,

CHENNAI-600 104.

S.C.No. 8 of 2019

Deposition of witness for

PW 15

Name : Thiru. Ilangovan

Father's Name : Ayyavu

Designation :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 23rd day of July 2025 .

---

23.07.2025

PW15 முதல் விசாரணை

சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

எதிரி ஆஜர்

நான் தற்சமயம் திருவொற்றியூர் உதவி ஆணையளராக இருந்த கடந்த 31.03.2025 அன்று ஓய்வு பெற்றேன். கடந்த 01.01.2018 -ம் தேதி கே-7 ,ICF காவல் நிலையத்தில் சட்டம் ஒழுங்கு ஆய்வாளராக பணிபுரிந்தபோது அன்றைய தேதியில் நிலைய பொறுப்பில் இருந்த உதவி ஆய்வாளர் திரு. உதயகுமார் என்பவர் புகார்தாரர் திலீப் த/பெ. ஆரோக்கியசாமி, கக்கன்ஜி நகர் என்பவரிடம் ஒரு எழுத்து மூலமான புகாரைப் பெற்று கே-7 ICF காவல் நிலைய குற்ற எண். 01/2018, ச/பி, 302 இ.த.ச.வின் படி காலை 09.30 மணிக்கு வழக்கு பதிவு செய்து , விரைவு முதல் தகவல் அறிக்கையை தயார் செய்து, எனக்கு அனுப்பியதை நான் சம்பவ இடத்திலேயே பெற்றுக்கொண்டு சம்பவ இடத்தை காலை 10.00 மணிக்கு பார்வையிட்டு, சாட்சிகள் சாமுவேல், அசோக்குமார் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்தேன். அதில் சாட்சியின் கையொப்பம் பெற்றேன். சம்பவ இடத்தில் இரத்த கறை படிந்த இரும்பு துண்டுகள் 3, இரத்த கறை படியாத இரும்பு துண்டுகள் 2, இரத்தம் படிந்த சகதி மண் சுமார் 100 கிராம், இரத்தம் படியாத சகதி மண் சுமார் 100 கிராம் மற்றும் கருப்பு கலர் நோக்கியோ போன் சிம் கார்டு இல்லாதது ஒன்று ஆகியவற்றை

அதே சாட்சிகளின் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன். பார்வை மகசர் ஏற்கனவே அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மாதிரி வரைபடம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.10 மற்றும் 11 ஆகும். என்னால் கைப்பற்றப்பட்ட கருப்பு நிற நோக்கியோ செல்போன் சா.பொ.11 ஆகும். சம்பவ இடத்தில் இருந்த இறந்து போன நபரின் உடலைக் கைப்பற்றி சம்பவ இடத்திற்கு அருகே பொதுகழிப்பிடத்திற்கு எதிரே வைத்து பிரேத விசாரணை மேற்கொண்டேன். அந்த பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.13 ஆகும். பிரேத விசாரணை முடித்து பிரேத பரிசோதனை செய்வதற்காக முதல் நிலை காவலர் பாலசந்தர்(26076) என்பவர் மூலமாக வேண்டுகோள் கடிதம் கொடுத்து கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் சாட்சிகள் திலீப், தாமரைச்செல்வி, ப்ரீத்தா, குணா, லோகேஷ், ஆனந்த், முரளி, சாமுவேல், அசோக்குமார் ஆகியோரை விசாரித்து வாக்குமூலத்தை தனித்தனியாக பதிவு செய்தேன். பின்னர் இந்த சம்பவத்தில் ஈடுபட்ட எதிரி சூர்யா (எ) மேசா என்பவரை தேடி அருகில் உள்ள இடங்கள் எல்லாம் சென்று தக்க புலன் வைத்தேன். பின்னர் எனக்கு கிடைத்த தகவலின் படி சம்பவத்தில் ஈடுபட்ட எதிரியானவர் வில்லிவாக்கம் ரயில் நிலையம் அருகே இருப்பதாக தகவல் அறிந்து என்னுடைய காவல் குழுவினருடன் சென்று, எதிரியை 16.30 மணிக்கு வில்லிவாக்கம் ரயில்நிலையத்தில் வைத்து கைது செய்தேன். பின்னர் எதிரி தான் செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டு ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுப்பதாக சொன்னதன் பேரில் அங்கிருந்த சாட்சிகள் சக்திவேல், செல்வக்குமார், ஆகியோர் முன்னிலையில் எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை 16.40 மணி முதல் 17.30 மணி வரை பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலம் அ.சா.ஆ.14 ஆகும். ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சிகளின் கையொப்பம் பெற்றேன். பின்னர் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் அடிப்படையில் , இறந்தவரை கொலை செய்ய பயன்படுத்திய சுமார் 31.5 செ.மீ நீளமுள்ள கத்தி ஒன்றை வில்லிவாக்கம் ரயில்நிலையம் அருகில் இருந்த புதரில் மறைத்து வைத்திருந்ததையும், அதனுடன் இரத்த கறை மற்றும் சகதி படிந்த காக்கி கலர் பேண்ட் ஒன்றையும், நீல நிற முழுக்கை சட்டையையும் அதே இடத்தில் இருந்து ஆஜர் செய்தார், அதை அதே சாட்சிகள் முன்னிலையில் 17.45 மணிக்கு மகசர் தயார் செய்து கைப்பற்றினேன். அந்த மகசர் ஏற்கனவே அ.சா.ஆ.7 ஆக குறியிடப்பட்டுள்ளது. மேற்படி இரத்த கறை மற்றும் சகதி படிந்த காக்கி கலர் பேண்ட் ஒன்றும், நீல நிற முழுக்கை சட்டை ஒன்றும் ஏற்கனவே

சா.பொ.7 மற்றும் 8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் எதிரி மற்றும் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களுடன் காவல் நிலையம் வந்து எதிரியை திரேக பரிசோதனை செய்து, நிலைய பாராவசம் ஒப்படைத்து பின்னர் எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். எதிரியிடம் இருந்து கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களை படிவம் 95 மூலமாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். மேற்படி படிவம் 95 அ.சா.ஆ.14 மற்றும் 15 ஆகும். பின்னர் இறப்பு அறிக்கையை பெற்று நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த இறப்பு அறிக்கை அ.சா.ஆ.16 ஆகும். சாட்சிகள் சக்திவேல் மற்றும் செல்வகுமார் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகள் திலீப், தாமரைசெல்வி, குணா, லோகேஷ், செல்வகுமார், சக்திவேல் ஆகியோரை அன்றைய தினம் மீண்டும் விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 02.01.2018 -ம் தேதி இந்த வழக்கை மேலும் விசாரணைக்கு எடுத்து கொண்டு, கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு சென்று இறந்தவரின் பிரேதத்தின் மீது பிரேத பரிசோதனை செய்ய நடவடிக்கை எடுத்தேன். பிரேத பரிசோதனை முடித்து பிரேதத்தை நல்லடக்கம் செய்ய உறவினரிடம் ஒப்படைத்தேன். பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் திரு. சுரேஷ்குமார் அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அவரிடம் இருந்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றேன். பின்னர் பிரேத பரிசோதனைக்கு சென்ற காவலர் (26076) பாலச்சந்தர் என்பவர் இறந்தவரின் உடலில் இருந்து கைப்பற்றப்பட்ட இரத்தகறை படிந்த சிவப்பு கலர் முழுக்கை T-Shirt மற்றும் இரத்தம் மற்றும் சகதி படிந்த வெளிர் நீல கலர் Jeans Pant, மஞ்சள் கலர் உள்ளாடை ஆகியவற்றை படிவம் 95 -ல் கைப்பற்றினேன். அந்த படிவம் 95 அ.சா.ஆ.17 ஆகும். பின்னர் 03.01.2018 -ம் தேதி மு.நி.கா. பாலச்சந்தரின் மூலம் இறந்தவரின் உடல் உள்ளுறுப்புகளை இராசாயண பகுப்பாய்வு செய்வதற்காக இராசாயண பகுப்பாய்வு கூடத்திற்கு அனுப்பி வைத்தேன். பின்னர் நீதிமன்றத்தில் இருந்து திரும்ப அனுப்பப்பட்ட வழக்கு சொத்துக்களை இரசாயண பகுப்பாய்வு கூடத்திற்கு அனுப்புவதற்காக நீதிமன்றத்திற்கு 06.01.2018 அன்று வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். பின்னர் 09.01.2018 -ம் தேதி சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகளான குணா மற்றும் லோகேஷ் இருவரும் நீதித்துறை நடுவர் அவர்களிடம் ரகசிய வாக்குமூலம் அளிக்க விரும்புவதாகவும், எதிரியை அடையாளம் காட்ட தயாராக இருப்பதாக தெரிவித்ததன் பேரில் , அவர்களுடைய ரகசிய வாக்குமூலத்தை கு.வி.மு.ச

164 -ன் கீழ் பதிவு செய்ய வேண்டுகோள் கடிதத்தை கொடுத்தேன். பின்னர் 10.01.2018 அன்று நீதிமன்ற காவலர் எண். 38352 சிவானந்தம் என்பவர் மூலமாக தடய சொத்துக்களை நீதிமன்றத்தில் இருந்து பெற்று இரசாயண பகுப்பாய்விற்கு ஆய்வுக்கு உட்படுத்த அனுப்பி வைத்தேன். மேற்படி தடய சொத்துக்கள் 12.01.2018 அன்று இரசாயண பகுப்பாய்விற்கு ஆய்வு கூடத்தில் ஒப்படைத்ததாக காவலர் சிவானந்தம் அறிக்கை செய்துள்ளார். பின்னர் 18.01.2018 -ம் தேதி நேரடி சாட்சிகளான குணா, லோகேஷ் இருவரையும் கு.வி.மு.ச 164 -ன் கீழ் வாக்குமூலம் பதிவு செய்ய 5 -வது பெருநகர நீதித்துறை நடுவர் முன்பு காவலர் சிவானந்தம் மூலமாக அனுப்பி வைத்தேன். பின்னர் 22.01.2018 அன்று நான் எதிரியை சாட்சிகள் குணா, லோகேஷ் அடையாளம் காட்டுவதற்காக அடையாள அணிவகுப்பிற்காக சென்னை மத்திய சிறைக்கு அழைத்து சென்று, அடையாள அணிவகுப்பில் பங்கு பெற உரிய நடவடிக்கை மேற்கொண்டேன். பின்னர் 25.05.2018 அன்று தடய அறிவியல் ஆய்வகம் சென்று தடய பொருள்கள் மீது ஆய்வு செய்து அறிக்கை வழங்கிய அறிவியல் அலுவலர் (உயிரியல்) திரு. பாஸ்கர் அவர்களை விசாரித்து அவருடைய வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அவரால் வழங்கப்பட்ட அறிவியல் ஆய்வு அறிக்கை அ.சா.ஆ.18 ஆகும். பின்னர் சாட்சிகள் சிவானந்தம், ஒப்புதல் வாக்குமூலங்களை பதிவு செய்ய எனக்கு உதவியாக இருந்த பெண் காவலர் (43538) திருமதி. தனலட்சுமி அவர்களை விசாரணை செய்து வாக்மூலம் பதிவு செய்தேன். இதற்கு இடையில் எனக்கு பணி மாறுதல் வந்ததால், வழக்கு கோப்பை எனக்கு பின்னால் வந்த திரு. ராயப்பன் ஏசு நேசன் அவர்களிடம் ஒப்படைத்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u> - இல்லை

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct.

23.07.2025

III Addl. Sessions Judge.
III Addl. Court.